# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)



## அக்கினியில் என்னை 'பொன்னாக மாற்றும்' கர்த்தர்!

**சு**ற்றி நின்ற நண்பர்கள்கூட "உன் கஷ்ட சூழ்நிலையை பார், தேவன் உன்னை கைவிட்டார்! உன் தேவன் எங்கே?" என யோபு மீது சிறிதுகூட கரிசனையில்லாமல் கூறியதைக் கேட்ட, யோபு சற்றே தடுமாறினார்! கொஞ்சம் மௌனத்திற்குப் பிறகு, மனம் தெளிந்த யோபு, உறுதியான குரலில்: "சினேகிதன் எலிப்பாஸ், கேள்! இந்த கொடிய சூழ்நிலையில் 'நான் அவரைப் பார்க்காவிட்டாலும்' என் இடப்பக்கத்தில் தேவன் கிரியை செய்வதையும், என் வலப் பக்கத்தில் கிரியை செய்வதையும் திட்டமாய் உணர்கிறேன்! அவரது கிரியை முடிந்ததும் "என் தேவனின் கையில் பொன்னாய் ஜொலிப்பேன்" (யோபு 23:8-10) என கூறியதும், சற்று வெட்கத்துடன் எலிப்பாஸ் தூர நின்றான்!

ஆம், 'அக்கினியும்' எனது நன்மைக்கே என அறிவது ஜெய ஜீவியம்! -tr

பெட்டகம் 41
பரல்கள் 08 ஆகஸ்ட் 2025



## ‘சத்தியத்தின்படி வாழாதவர்களை’ தேவன் மாத்திரமே பிரித்தெடுக்க முடியும்!

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்றும்! ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்கள் என்றும்! திரண்டு வந்த ஜனத்திரளில் பெரும்பாலோர் “ஏதோ அபூர்வமான ஒன்றில் ஆர்வம் கொண்டார்கள்” அவ்வளவு தான். இவ்வாறு அபூர்வங்களைக் கண்ட பரவச மக்களுக்கென்றே, ‘ஆழ்ந்த சத்தியங்கள்’ எனக் கூறும் புத்தகங்கள், புத்தக சாலையில் நிரம்பி வழிகின்றன.

இந்த வெறும் ஆர்வத்தோடு சத்தியங்களைக் கேட்ட திரளானோர், அதன்படி வாழ்வதற்கு ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை! வெற்று ஆர்வத்தைக் காட்டினார்கள், கைக்கொள்ளும்படியான தீராத வாஞ்சையோ அவர்களுக்கு இல்லை!

‘இவர்களையெல்லாம் சபையில் பிரித்து எடுக்கும்’ அந்த கடினமான செயலை தேவனிடமே விட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய சோதனைகளை, தேவனுடைய ஆவியானவர் மாத்திரமே வைத்திட முடியும். வேத வாக்கியங்களில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் ‘அவர்களே அறியாமல்’ பரிசுத்த ஆவியினால் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும், பரிசுத்த ஆவியானவரோ ஒரு நபரிடம் கூட “நீங்கள் சோதிக்கப்பட போகிறீர்கள்” என முன் கூட்டியே கூறியதில்லை! ஆகவேதான், நாம் அனைவருமே ‘விழிப்புள்ள ஜீவியம் செய்திட’ கவனம் கொண்டிருப்போமாக!

*-Ed*

**2025 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஆகஸ்ட் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A-Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

## ‘கூடாதவைகளை’ எதிர்கொண்டு கிரியை செய்திடும் கர்த்தர்!

*அவர்போல் கிரியை செய்திட இவ்வுலகில் யாரும் இல்லை*

*இது எப்படியாகும்? இதை எப்படி செய்து முடிக்க முடியும்? போன்ற கேள்விகள் மானிடரின் மத்தியில் நடமாடும் தடை கற்களாகவே இருக்கிறது. எந்த மானிடனாயிருந்தாலும் அவனுடைய வாழ்வின் முன்னேற்றத்தை இந்த தடை கற்கள் நிறுத்தி விடுகின்றன! அதாவது இனி அவன் வாழ்க்கையில் முன்னேற முடியாத நிலைக்குள் அடைக்கப்பட்டு போகிறான்.*

*இன்று ஓர் நற்செய்தி! ஓர் புதிய பாதை திறக்கப்படும் நற்செய்தி. அது, நீங்கள் உணராமலும் அறியாமலும் வாழ்ந்து வருகிற ‘தேவனே’ அந்த நற்செய்தியாயிருக்கிறார். மனுஷர்கள் மத்தியில், சர்வ வல்ல தேவனாய் பிரவேசித்ததற்குரிய முக்கிய காரணம் என்ன? ஆம், “மனுஷனால் முடியாததை, அவனுக்கு செய்து முடித்திட வருகை தந்த சர்வ வல்லவர்!” என்பதை வெளிப் படுத்தவேயாகும். மானிட சரித்திரத்தை திருப்பிப் பாருங்கள்:*

> “
> **அது பழைய ஏற்பாடு தொடங்கி இன்று வாழும் புதிய ஏற்பாடு நாள் வரை இந்த சர்வ வல்ல தேவன் ‘முடியாது, கூடாது’ என்ற வார்த்தைகளை முற்றிலும் அகற்றி, சாதித்து ஜெயம் பெற்றவர் இந்த சர்வ வல்ல தேவன்!**

*இதை வாசிக்கும் உங்கள் ஜீவியத்தின் ‘யாதொரு சூழ்நிலையிலும்’ ‘இனிமுடியாது!’ என்ற நிலை காணப்படுகிறதா? அந்த ‘கூடாத’ என்ற நிலை இன்னமும் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தை வழிமறித்து நிற்கிறதா? அப்படியானால், அன்பார்ந்தவரே காலம் கடந்து விட்டதாக எண்ணாதிருங்கள்:*

*சர்வ வல்ல தேவனை பொருத்த வரையில் ‘காலம் கடந்துவிட்டதை’ ஒரு பொருட்டாக எண்ணமாட்டார். கொண்டு வாருங்கள், அந்த முடியாது, அல்லது கூடாது என்று நீங்கள் புலம்பிய அனைத்தையும் கொண்டு வாருங்கள். ஆனால், ஓர் எளிமையான ஆனால் தேவனுக்கோ வலிமையான நல்ல விசுவாசத்தோடு அவரிடத்தில் கொண்டு வருவார்கள்.*

*யாருடைய வாழ்க்கையிலெல்லாம் 'இனி முடியாது' என்ற நிலையை மாற்றி 'தேவன் மகிமைப்படும்' சம்பவம் நிகழ வேண்டுமோ? அவர்கள் அத்தனை பேர் வாழ்க்கையிலும் 'முடியாது' என்ற தடைகளை முறித்து தேவன் தன் மகத்துவ வல்லமையை வெளிப்படுத்துவார்! உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளைக் காட்டிலும், உங்களை இறுக கட்டியிருக்கும் பாவவிலங்கோடும், அவிசுவாச கட்டோடும்.... இனியும் தாமதிக்காமல் சர்வ வல்லவரிடம் வந்து விடுங்கள். நீங்கள் சர்வ வல்லவரை விசுவாசித்து, உங்களை கட்டியிருக்கும் சங்கிலியோடு 'முழு விசுவாசத்துடன்' தேவனிடம் சரணடைந்து விட்டால், உங்களின்இரும்பு சங்கிலிகளையும் கட்டுகளையும் தேவன் உடைத்தெறிவதை காண்பீர்கள்!*

காலகாலமாய் கிறிஸ்தவத்தைக் குறித்து கூறப்பட்டு வரும் உண்மையான செய்தி என்ன தெரியுமா? "கிறிஸ்தவம் ஒன்று மாத்திரமே, மனுஷனால்முடியாதுஎன்றுதள்ளப்பட்டகடந்தகாலத்தைபிரகாசமாய் மாற்ற முடியும்!" இது, அன்றும் இன்றும் பின்பு என்றென்றும் நிலைத்து நிற்கும் சத்திய வாக்கு. இதை கோடிட்டு வேத புத்தகம் கூறும் சரித்திர ஜெய முழக்கத்தை இப்போது கேளுங்கள்: "வெட்டுக்கிளிகள் பட்சித்துப்போட்ட வருஷங்களின் விளைவை உங்களுக்கு திரும்ப அளிப்பேன்!" (யோவேல் 2:25) என்ற முழக்கமே தேவன் அறிவிக்கும் மங்கள கீதம்! இத்தனை பெரிய மாற்றம் சம்பவிப்பதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம், நம் வாழ்வின் இருளான எல்லா சூழ்நிலையிலும் "முழு விசுவாசத்தோடு" சர்வ வல்லவரின் கையில் சரணடைவதுதான்! நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பது ஒருபொருட்டல்ல! மாறாக "**தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார்**" என்பதே நமக்கு அருளப்படும் மாபெரும் நற்செய்தியாயிருக்கிறது.

இந்த சர்வ வல்லவர், இனிமுதற்கொண்டு உங்கள் வாழ்க்கையில் செய்திடப்போகும் அற்புதம் என்ன தெரியுமா? "தேவன் உங்களை மன்னிப்பார்! தேவன் உங்களை சுகமாக்குவார்! தேவன் உங்கள் இழப்பு முழுவதும் ஈடுசெய்து திருப்பித் தருவார்! ஏனெனில் மாறாத சத்திய வேதம் அவரைப் பரிவுடன் அழைத்திடும் மென்மையான குரல் என்னவென்றால் "சகல கிருபையின் தேவன்!" என்ற அதிசயமேயாகும்.

பரிசுத்தவான் *ஆண்ட்ரூமுரே* கூறியதைப்போல் "என் தேவனுக்கு முன்பாக நிறுத்தப்படும் எல்லா கூடாதவைகளும் அவருக்கு பேரின்பம்! அவர்போல் வல்லமையாய் கிரியை செய்திட இந்த உலகில் யாரும் இல்லை!" என தன் வாழ்வின் அனுபவத்தை மதுரமாய் கூறி வைத்தார்.

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## ‘விசுவாசத்திற்கு கீழ்ப்படிதலே’ சபையின் பிரதானம்!

*சபைக்கு ‘மனுஷீகமான யூகங்கள்’ பெரும் இடையூறு*

**மா**ர்க்க அடிப்படையான சபைகளுக்கும், ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நாம் அவர்களைவிட மேலானவர்கள் என சொல்லிக் கொள்வதில் அல்ல! அவர்கள் தங்கள் ஜீவியத்தில் கடைப்பிடிப்பதை விட “மேலானதொன்றை விரும்பும் ஜனங்கள் நாம்!” என்பதே அந்த வித்தியாசமாயிருக்க வேண்டும்.

> **“மார்க்க சபைகளில், ஒருவருக்கொருவர் ஒத்துக்கொண்டால் ஐக்கியம் என கருதுவார்கள். ஆனால் நமக்கோ, ஐக்கியத்தின் முதலாவது முக்கிய தேவை “ஒரே விசுவாசமும்..... அந்த விசுவாசத்தை அறிக்கை செய்வதுமேயாகும்” மேலும், இந்த விசுவாசத்திற்கு கீழ்ப்படிவது மூலமாய், நாம் கண்டடைந்த கறையற்ற பரிசுத்த ஜீவியமே.... நம் ஐக்கியத்தின் உறுதியான அடிப்படை ஆதாரமாயிருக்க வேண்டும்!**

நம்முடைய பெலவீனமான சுபாவங்கள் அல்லது உள்நோக்கமற்ற சில தவறுகள் அல்லது மேலோட்டமாய் தோன்றும் சில தீமைகள், நாம் ஒருவருக்கொருவர் கொண்ட ஐக்கியத்தை சீர்குலைத்திட அனுமதிக்கவே கூடாது! இதற்கு மாறாக, நாம் ஒருவருக்கொருவர் கொண்ட விசுவாசத்திலும் அன்பிலும் கொண்ட ஐக்கியமும், பணிவிடை ஊழியமும்.... நம் பழக்கவழக்கங்களையும் மேலோட்டமான தீமைகளைக்கூட கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றுவதாயிருக்க வேண்டும்!

> **“மாம்ஷீகமானவனுக்கு இவைகள் புரிவதில்லை. அவன், அந்தந்த சமயங்களில், தனக்கு பிரியமானவைகளை மனதில் வைத்துக் கொண்டு, உடனடியாக நியாயதீர்ப்பு வழங்குவதையே தன்னுடைய பங்காய் கொண்டிருப்பான்!**

அவன் கண்களில் விசுவாசமோ, விசுவாச அறிக்கையோ, தேவன் விரும்பிடும் பரிசுத்தமோ, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், தேவ தயவு செய்து வரும் கிரியைகளோ.... அவனது மாம்ச கண்களுக்குத் தெரிவதில்லை!! இதுபோன்றவர்கள், பக்தியுள்ள சகோதரர்களை நெருங்கி வருவதில்லை. அதற்கு காரணம் “தங்கள் மறைவான அசுசிகள் வெளிப்பட்டுவிடுமோ” என்ற அவர்களது அச்சமேயாகும்! அல்லது பிறரை நியாந்தீர்க்கும் மனப்பான்மையோடு “**தங்களுக்கே விளங்காத பகுதிகளைக் கூறி**”தூரநிற்பார்கள்! இதுபோன்றவர்கள், சீக்கிரத்தில் இடறி, கிறிஸ்துவின் வைராக்கியத்திற்கு மிக குறைந்த

*தரத்தையே உயர்த்த விரும்புவார்கள்! இத்தனை கண்சொருகிப்போன நிலையில், எளியவர்களுக்காக தாங்கள் பாடுபடுவதைப் போலவும், தாங்கள் செய்வது தேவனுக்குப் பிரியமானது எனவும் அடிக்கடி கூறிக்கொள்வார்கள். அவ்வாறு கூறும் அவர்களது வார்த்தைகளை, அந்தரங்கத்தில் வீழ்ச்சியுற்ற விசுவாசிகள் 'தாராள ஐக்கியத்துடன்' கேட்பார்கள்!*

"

**மெய்யான ஐக்கியத்தை நாடுவோர், தங்கள் ஸ்தல சபைக்கு ஆத்தும கண்காணியாயிருப்பவரிடம் தங்களை மறைத்துக் கொள்ளவே மாட்டார்கள். தங்கள் இருதய சிந்தைகளை மறைத்துக் கொள்ள துணிந்தவர்கள் யாராயிருந்தாலும், அந்த ஸ்தல சபையை விட்டு தாங்களே தங்களை வெளியே வைத்துக் கொண்டவர்களாய் இருப்பார்கள்!**

*அதுபோலவே, அந்த ஸ்தல சபையின் கண்காணியானவரும் தங்கள் சிந்தைகளை சக விசுவாசிகளிடம் பகிரங்கமாய் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும். இதுபோன்ற செயலால், ஜனங்கள் அந்த கண்காணியானவரை எளிதில் பற்றிக்கொள்வார்கள். சபையில் பரிசுத்தவான்களாக வாழ்ந்திட வாஞ்சிப்பவர்கள், தங்களை நடத்துபவரிடம் முழுவதுமாய் மனம் திறந்து பேச விருப்பம் கொண்டிருக்க வேண்டும் (2கொரி.5:11). அப்போதுதான் அந்த சபையின் மூப்பராயிருப்பவர்கள்,* **மகிழ்ச்சியுடன்** *அவர்களுடைய இரட்சிப்பிற்கு பிராயாசப்படும்படி தூண்டப்படுவார்கள்! (எபி.13:17).*

*தேவனுடைய வீடாயிருக்கும் அவரது சபையில், கீழ்க்கண்ட வசனத்தின் சூத்திரத்தை கைக்கொண்டு வாழ மறவாதிருக்க வேண்டும்: "***மறைவானவைகள்** *நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்!* **வெளிப்படுத்தப்பட்டவைகளோ....** *நமக்கு உரியவைகள்" (உபா.29:29). இந்த வசனம் தன்னை தாழ்த்த விரும்பும் ஒவ்வொரு மூப்பருக்கும் அல்லாமல், நம் அனைவருக்குமே உரியதாகும். ஸ்தல சபைக்குள் 'வெளியரங்கமான' பொல்லாத குணமுள்ளவர்களை, சபையின் கண்காணியாயிருப்பவர் நியாயந்தீர்த்து, அந்தப் பொல்லாத நபரை சபையிலிருந்து விலக்கி வைப்பதற்கும், வேதத்தில் அனுமதி தரப்பட்டுள்ளது!*

"

**ஆனால் எது பொல்லாதவைகளாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்? 'எவைகளெல்லாம் விசுவாசத்திற்கு விரோதமாய்' வெளியரங்கமாக காணப்படுகிறதோ, அவைகளே நியாந்தீர்க்கப்பட வேண்டும். அல்லாமல், நாமாக யூகித்துக் கொள்ளுகிற பொல்லாதவைகள் அல்ல!**

வெளியரங்கமாக்கப்பட்டதும், கிட்டதட்ட சபையிலுள்ள எல்லோருடைய கண்களுக்கும் தெளிவாய் தோன்றப்பட்டவைகள் நியாயந்தீர்க்கப்படும்போது, எல்லா ஜனங்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள்!

காரியத்தின் முடிவாக "எனக்கு மறைவாக வெளிப்படுத்தப் பட்டவைகள், அந்தரங்க மறைவிலே நியாயந்தீர்க்கப்பட வேண்டும்..... ஒன்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிறப்படி நடந்தால், அவை எல்லோருக்கும் முன்பாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்" (1தீமோத்தேயு.5:20). மாம்சத்திற்குரிய கிறிஸ்தவன் இந்த எளிய! இணக்கமான! நேர்மையான! பிரமாணத்தை புரிந்து கொள்ளான். அது ஏனெனில், இந்த பிரமாணங்கள் அவனுடைய இருதயத்தில் இடம்பெற்று வாழவில்லை. ஒரு ஆவிக்குரிய மனுஷன் இந்த இணக்கம் நிறைந்த பிரமாணத்தை நேசிப்பான், அதன்படி நடப்பான்!!

- எலியாஸ் அஸ்லாக்சன்

---

## ஜெப தியான இனிமையை பத்து வயதில் கண்டேன்!

*'தெய்வ குணம்' சிறுபிராயத்தில் தோன்றுவது நல்லது*

ஆரம்பத்திலிருந்தே என் தாய் என்னைப் புறக்கணித்த நிலையில், இதையெல்லாம் கண்ணுற்ற என் தந்தை வருத்தமடைந்தார். என்னுடைய ஏழாவது வயதில் ஒரு சிறந்த கான்வெண்ட் ஸ்கூலில் என்னைச் சேர்த்தார். என் தந்தைக்கு நெருங்கிய உறவின பெண்ணிடம் என்னை அறிமுகப்படுத்தி, பள்ளி பாடங்கள் கற்றுத்தரும்படி கேட்டுக்கொண்டார். அந்த பெண்மணி மிகுந்த அன்புள்ளத்தோடு என்னை நடத்தினார்கள். இவை அனைத்தும், தேவன் என்னை இரட்சிப்பதற்கு வழிநடத்தும் பாதையாகவே தோன்றியது. தேவன் என் மீது கொண்ட மிகுந்த அன்பை எண்ணி அவரைத் துதித்தேன்!

என் படிப்பு உதவிக்காக நியமிக்கப்பட்ட நல்ல ஒரு கிறிஸ்தவ பெண்மணி மிக அருமையாக எனக்கு பாடம் கற்றுக்கொடுத்தார்கள். மேலும் அவர்கள் அடிக்கடி ஜெபிப்பதையும் நான் கண்டு பரவச மடைந்தேன். தேவன் மீது அப்படியொரு அலாதி விசுவாசம் கொண்டிருந்தார்கள்! நான் கல்வியில் மிக நேர்த்தியாய் தேறி வந்தேன். என்னிடம் எந்த கேள்வி கேட்டாலும் நான் பிழையில்லாது பதில் சொன்னதைக் கண்ட ஆசிரியர்கள், மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள்.

விடுமுறை காலத்தில் வீட்டிற்கு வந்த நான், மீண்டும் கான்வெண்டிற்கு திரும்பி வந்தேன். அங்கு எனக்கு உதவி செய்த பக்தியுள்ள பெண்மணி மறுபடியும் என்னை சந்தித்தார்.

"

**நான் நன்றாய் படித்தாலும், பொய் சொல்லும் கெட்ட பழக்கம் என்னை தொற்றிக்கொண்டது. மேலும் 'கசப்பான முறுமுறுப்பும்' எனக்கு ஏற்படத் துவங்கியது. என் சிந்தையிலிருந்து தேவனும் கொஞ்சம் கொஞ்சமாய் விலகிவிட்டார்.**

*இதையெல்லாம் கவனித்துப் பார்த்த அந்த பக்தியுள்ள பெண், என் ஆரம்பகால விசுவாசத்திற்கு கை கொடுத்து உதவி, என்னை இரட்சிப்பிற்குள் நடத்தினார்கள். எனக்கும், அவர்கள் பேசுவதை கேட்க ஆசையாயிருந்தது! ஏழைப் பிள்ளைகளிடம் அவர்கள் காட்டிய பரிவு, ஆலயம் செல்லுவதற்கு ஒரு கடமையைப் போல் அல்லாமல், ஆர்வமுடன் சென்ற அவர்களது வாஞ்சை...... ஆகிய அனைத்தும் என்னை கவர்ந்து, கர்த்தருக்குள் என்னை கிட்டிச் சேர்த்திட உதவியது!*

"

**கான்வெண்ட் தோட்டத்திற்கு கீழேயிருந்த ஒரு சிற்றாலயத்தில், தேவனை சந்திக்கும் படியான ஓர் தனி இடம் கண்டேன்! அங்கு நான் அமர்ந்து தேவனை தியானித்தேன். எனக்கு தரப்பட்ட காலை உணவை தள்ளிவைத்து, அந்த உணவை மாதா சிலைக்குப் பின்பாக மறைத்து வைத்து தேவனோடு ஜெபிப்பேன்.**

*உணவை தள்ளி வைத்து தியானித்தால், எனக்குள் இருந்த தீய குணம் போய்விடும் என நினைத்தேன். ஆனால் எனக்குள் குடிகொண்டிருந்த* **சுய – அன்பு** *என்னை விட்டு விலகாத வலிமை கொண்டதாய் எனக்குள் இருந்தது. என்னுடைய காலை உணவை ஆலய மறைவில் வைத்து விட்டு நீண்ட நேரம் தியானித்ததை, ஆலய கன்னியாஸ்திரீகள் பார்த்துவிட்டனர். எனது ஒன்பதாவது வயதிலேயே நான் தேவன் மீது கொண்டுள்ள வாஞ்சையையும் பக்தியையும் கண்டு ஆச்சரியப்பட்டு, என்னை* **தியான வாழ்க்கைக்கு** *ஊக்குவித்தார்கள். ஆனால், நான் அடிக்கடி சுகவீனமாகும்போது 'தெய்வ அன்பும்' என்னில் குறைவதை கண்டு வேதனைப்பட்டேன். ஒருமுறை விஷக்காய்ச்சலிலும், மற்றொரு முறை மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டதினிமித்தமும் அதிக பலவீனமடைந்து, மரிக்கும் நிலைக்குகூட வந்துவிட்டேன்!*

*என் பெலவீனத்தில் உதவி செய்யும்படி, என் தந்தை, எனது பெரியம்மா வீட்டில் இளைப்பாற வைத்துச் சென்றார். அங்கிருந்த எனது இரண்டு அக்கா சகோதரிகள் 'ஏனோ' என்னை வெறுத்தார்கள். ஒருமுறை நான் எனது இளைய அக்காவிடம் சிரித்துப் பேசி அதிக நேரம் செலவு செய்ததைக் கண்ட எனது மூத்த அக்கா, சாட்டையை என் கையில் கொடுத்து 'என்னை நானே அடிக்கும்படி' செய்து*

*துன்புறுத்தினார்கள். மற்றொரு முறை, ஒரு அற்ப காரியத்திற்கு அந்த மூத்த அக்காள் இந்த முறை, தானே சாட்டையை எடுத்து என்னை நன்றாக அடித்துவிட்டார்கள்! நான் தேவனை அறிய ஆரம்பித்த காலமாய் அந்த நாட்கள் இருந்தபடியால், இந்த துன்பத்தினிமித்தம் எனக்கு "தீய இருதயம்" வந்துவிடக் கூடாதே என்றே மனதில் வேதனை கொண்டேன்! இதையே நான் ஜெபமாய், தேவனிடம் சென்று முறையிட்டேன்:*

> **"என் பிரிய தேவனே, எனக்கு ஏற்பட்ட தண்டனையின் துன்பம் என் உள்ளத்தின் ஆழத்தில் அமர நான் விரும்பவில்லை! நித்திய வாழ்க்கை என்ற என் நம்பிக்கையில், நான் நரகத்தையும் முன்வைக்க விரும்பவில்லை! மோட்சத்தையும் முன் வைத்திட விரும்பவில்லை! அதற்கு மாறாக, உம் தெய்வீக குணத்திற்கு நான் பிரியமில்லாத மகளாய் இருக்கக்கூடாதே, என்ற ஒரே பயம்தான் எனக்குரியதாய் கொண்டுள்ளேன்! .....**

*தேவனே, என் பிழை உணர்ந்து உம்மிடம் வரும்போது, நீர் அதை மன்னித்து, என் ஆத்துமாவில் தங்கிட மகிழும் உம் அன்பை அறிவேன். ஆகவே, என்னைச் சூழ்ந்த துன்பத்தைக்காட்டிலும்.... நீர் என்னைத் தள்ளிவிடாதிருப்பதே என் பாக்கியம்!!" என்று தேவனோடு பேசிப் பழகியபடியால், என் ஜெபவாழ்க்கை மிக இனியதாய் துவங்கியது! இவ்வாறு தேவனோடு உறவாடும் அனுபவ ஆரம்பம், எனது பத்தாவது வயதிலிருந்தே ருசிக்கத் துவங்கினேன்! கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*

*- மேடம் குயான்*

---

## நித்திய ஜீவியத்திற்குரியவன் 'கவலைப்படுவது' நியாயமல்ல!

*'கவலை' தேவனை புறம்பாக்கும்*

*கவலைப்படும் கிறிஸ்தவனை கூர்ந்துப் பாருங்கள்: "அவன், தேவன் என்னுடைய மீட்பர் என்றும்! சாத்தானுடைய கட்டுகளை அவிழ்த்து ஜெயிப்பவர் என்றும்! தன்னை பாதாளத்திலிருந்து மீட்டு 'நித்திய ஜீவனை அருளித் தருவார்' என்றும்! மனதார நம்புகிறார்கள். ஆனால், 'இன்றுள்ள பிரச்சனைக்கு' இன்றே விடுதலை தருவார், என்பதை நம்ப முடியாதவர்களாயிருக்கிறார்கள்! இவ்வாறாக, மகத்துவமுள்ள நித்திய காரியங்களை தேவன் செய்வார் என விசுவாசித்துவிட்டு, அற்ப உலக விஷயத்திற்கு கவலைப்படுவது வேடிக்கையானதல்லவா?*

*இன்று சிலர், "கவலைப்படுவதைக் குறித்து முக்கியப்படுத்தி பேசுகிறீர்களே, அது ஒரு சாதாரண மனுஷீக சுபாவம் தானே!"*

என கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் கூறுகிறப்படி இது ஒரு சாதாரண செயல் அல்ல! இவர்கள் அறியாதிருப்பது என்னவென்றால், ஏராளமான மூளை நரம்பு நோய்களும், சரீர பெலவீனங்களும் "நீங்கள் கவலைப்படும் மனதோடு" நேரடி தொடர்பு கொண்டதாயிருக்கிறது.

"

**கவலை ஒரு மனிதனை ஆட்கொண்டு விட்டால் அது அவனை அழித்துவிடும்! கவலை உங்களுக்குள் என்ன கிரியை செய்கிறது என்பதைவிட, தேவனை எப்படி பாதிக்கிறது என்பதே அதிக முக்கியத்துவம் பெறுகிறது!**

மெய்யாகவே, நீங்கள் கவலைப்படும்போது கூறுவது என்னவென்றால் "ஓ தேவனே, நான் இன்னமும் உம்மை நம்பியிருக்க முடியுமோ?" என கூறும் சந்தேக கேள்வியே ஆகும். உண்மைதான், கவலை தேவனை நேருக்கு நேராய் தாக்கி, அவருடைய தெய்வீக சுபாவத்தை களங்கப்படுத்துவதாயிருக்கிறது!

சில கிறிஸ்தவர்கள் "வேத வாக்கியங்கள் பிழையற்றது என்பதை நாங்கள் ஆழமாய் விசுவாசிக்கிறோம்" எனக்கூறுவதை கேட்டிருக்கிறேன். ஆனால் அவர்களோ, ஓர் தொடர்ச்சியான கவலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! ஒன்றை தங்கள் நாவினால் அறிக்கை செய்துவிட்டு, மறுபக்கத்திலோ மாறுபாடாய் வாழ்கிறார்கள். 'நாங்கள் எவ்வளவாய் வேதத்தை நேசிக்கிறோம்' என கூறும் இவர்கள், தேவன் கூறிய வார்த்தைகளை அவர் நிறைவேற்றுவது எப்படி? என கவலை கொள்வது எவ்விதத்திலும் பொருத்தமாய் இல்லை!

*கிறிஸ்தவர்களாய் இருக்கும் நீங்களோ அல்லது நானோ யாதொன்றைக் குறித்து கவலைகொள்ளத் தொடங்கும்போது, சூழ்நிலைகள் நம்மை ஆண்டுகொள்ள அனுமதித்து 'தேவனுடைய சத்தியத்தை' புறக்கணித்து விடுகிறோம். இதனிமித்தமாய், வாழ்வின் கடின சூழ்நிலைகள், தேவனுடைய மேலோங்கிய இரட்சிப்பை மங்கச் செய்து விடுகிறது! நித்திய நரகத்திலிருந்து தேவன் நம்மை இரட்சித்தார் என்ற சத்தியத்தை தெளிவாய் அறிந்து கொண்டபிறகு, அந்த தேவன் அன்றாட நமது நடைமுறை ஜீவியத்திற்கு உதவிக்கரம் நீட்ட மாட்டார் என நினைப்பது எவ்வளவு பெரிய தவறு என்பதை நமக்கு உணர்த்த, இயேசு வெகுவாய் பிரயாசப்பட்டார். இதே விதமான பிரயாசத்தை பவுலும் முயற்சித்தார் என்பதை எபேசியர் 1:18,19 வசனங்களில் காண்கிறோம்: "கர்த்தர் நம்மை அழைத்ததினாலே, நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை*

*இன்னதென்றும் பரிசுத்தவான்களிடத்தில் கர்த்தர் கொண்டிருந்த சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்.... விசுவாசிக்கிறவர்களாகிய* ***நம்மிடத்திலே காண்பிக்கும்படி,*** *தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று* ***நீங்கள் அறியும்படிக்கு,*** *கர்த்தர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்று உங்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்" என தன் மனபாரத்தை வெளிப்படுத்தினார். 'எப்படியெல்லாம்' வேத வாக்கியங்கள் நாம் விசுவாசத்தில் ஸ்திரப்படும்படி அருளப்பட்டிருப்பதை கவனித்தீர்களா? உங்களை எப்போதெல்லாம் கவலை தொற்றிக்கொள்கிறதோ, அப்போதெல்லாம் நீங்கள் விரைந்து வந்து வேத வாக்கியத்தில் அடைக்கலம் பெற்றுவிடுங்கள்!*

நாம் கவலைப்படும் நேரம், நம் பரம தகப்பன் மீது நம்பிக்கை இழக்கும் நேரமாய் மாறிவிடும்! "நான் அவரை அறிந்து கொள்ள வேண்டிய விதமாய் இன்னும் அறியவில்லை" என்பதே அதற்கு பொருளாகும்.

> **"அதற்கு ஓர் வலிமையான தீர்வு என்னவென்றால்: "வேத வாக்கியங்களை உற்று வாசித்து, தேவன் மெய்யாகவே எப்படி இருக்கிறார் எனவும், கடந்த காலங்களில் தம் ஜனங்களை எவ்வாறு போஷித்தார் எனவும் கண்டு மகிழுங்கள்!"**

இதுவே, எதிர்காலத்தில் அவர்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பெருகச் செய்திடும்!

இவ்வித நடைமுறை ஜீவியத்தை நீங்கள் பசுமையாய் காத்துக்கொள்ளாவிட்டால் 'அந்த வெற்றிடத்தை நிரப்ப' வேறு சில கவலையை சாத்தான் கொண்டு வந்து வைத்துவிடுவான்! அப்படியில்லாமல், வேத வாக்கியங்களின் பிரகாசமான பாதையைவிட்டு விலகாமல் "**நான் கவலைப்பட வேண்டியது தேவையற்றது!**" என்ற இனிய வாசகத்தை என்றென்றும் அறிக்கை செய்யுங்கள். வேத வாக்கியங்கள் அருளிய செல்வமான வெகுமதி இருக்கும்போது, கவலைப்படுவது தேவையோ? அவருடைய வாக்குதத்தங்கள் கண்முன் நிற்கும்போது, உணர்வில்லாதவனைப்போல் நிற்பது சரிதானோ? நெருங்கி நிற்கும் கவலை, யாதொரு பிரயோஜனமும் அற்றது என்பதை அறிந்து புறக்கணித்துவிட வேண்டாமோ? விசுவாசத்தை இழப்பதா? அது, அவிசுவாசிகளின் குணாதிசயம்! என உணர்ந்து, விசுவாசத்தில் ஜெயம் பெற்று வாழுங்கள்!

- ஜான் மேக் ஆர்தர்

## 'மனுஷ சாயலில் வந்து' தேவ சாயலை பிரதிபலித்த இயேசு!

*கிருபை நாதரிடம் ஜொலித்திடும் சத்திய ஒளி*

பரிசேயர் கிறிஸ்துவை இன்னாரென்று அறியாமல், தங்களைப்போல் அவரும் ஒரு மனுஷன்தான் என்று நினைத்து மோசம்போனார்கள்! தமது பாதங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர்விட்டழுத பாவியான ஸ்திரீயை இரட்சிக்கக்கூடியவரும், ஆயக்காரரையும் பாவிகளையும் அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்கள் ஜீவியத்தை முற்றிலும் மாற்றக்கூடியவரும், ஆயக்காரன் மத்தேயுவை தமக்கு அப்போஸ்தலன் ஆக்கக்கூடியவரும், அநியாயமாய் பொருள் சம்பாதித்த சண்டாளன் சகேயுவை, அவன் பொல்லாத வழியைவிட்டு நிமிஷத்தில் திருப்பக்கூடியவருமாகிய ஓர் உன்னத நபரை, தங்களைப்போன்ற ஒரு மனுஷன் என்று அவர்கள் எப்படி நினைக்கலாம்?

> "அவர் மனுஷன் என்பது எப்படி உண்மையோ அதுபோலவே அவர் மனுஷருக்கு மேலானவர் என்பதை அவர் கிரியைகள் நிரூபிக்கின்றதே!

ஆகையால், பரிசேயர் நமதாண்டவரைத் தப்பாய் நினைத்ததும், அவரை குற்றப்படுத்திப் பேசினதும் அநியாயமே! அவர் பாவத்தால் கறைப்பட்டிருந்தால் அவர்கள் சாட்டின குற்றம் மெய்யாயிருக்கும். ஆனால், அவரோடு சம்பந்தப்பட்ட பாவிகள் பரிசுத்தவான்களாக மாற்றப்பட்டதால், **பாவிகளின் சிநேகிதன்** என்றே அவரது பகைஞர்களால், பேர் சூட்டப்பட்டார்! அதுவே, அவரது பாக்கியமான பேராயிற்று! உலகத்துக்கு நித்திய சுவிசேஷமாயிற்று!

கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்கு, தேடி வந்த வழியை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவர் பாவிகள்மீது அன்பும் கிருபையும் உள்ளவர் என்பது மெய்தான். ஆனால், அவரது 'அன்பையும் கிருபையையும்' நமது பாவ ஜீவியத்துக்கு மூட லாக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. நாம் இரட்சிப்பென்று நினைத்துக்கொள்வது, அதிகபட்சத்தில் நமக்கு இரட்சிப்பாயிருக்கமாட்டாது! அனேகர் கொண்டிருக்கும் தவறான சிந்தை என்னவெனில், "நான் பாவிதான், ஆனாலும் என் ஆண்டவர் கிருபையுள்ளவர். ஆகையால், எப்படியும் என்னை இரட்சித்துக்கொள்ளுவார்!" என்று நினைப்பவர்கள் அநேகராயிருக்கிறார்கள்! எப்படியும் இரட்சித்துக்கொள்வார் என்றால் அர்த்தம் என்ன? எப்படி அவர் நம்மை இரட்சிக்க விரும்புகிறாரோ

அப்படித்தான் இரட்சிப்பார். **நாம் நினைக்கிறபடி அல்ல, அவர் நினைக்கிறபடி!** நமக்கு பாவ ஜீவியத்தை விட்டுவிடப் பிரியமில்லை! நமது ஜீவியம் முற்றிலும் மாற்றப்பட நமக்கு மனமில்லை! ஆனால், எப்படியும் ஆண்டவர் நம்மை இரட்சித்துக்கொள்ளுவார் என்று கூறிக்கொண்டே நம்மை வஞ்சித்துக்கொள்கிறோம். அவர் கிருபையுள்ளவர் என்பது மெய்தான். கிருபையினால்தான் தமது ஜீவனைக் கொடுத்தார். ஆனால், அவர் கிருபையோடுமாத்திரம் வந்தவரல்ல, அவர் கிருபையோடும் **சத்தியத்தோடும்** வந்தார்! "கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்து மூல மாய் உண்டாயிற்று" (யோவான் 1:17) என்ற உண்மை, வேதபூர்வமாய் வலுவானது!

> **"அவர் பாவிகளைக் கிருபையுடன் ஏற்றுக்கொள்கிறார்.... ஆனால், சத்தியத்தின்படியே அவர்களை இரட்சிக்கிறார்!**

*பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதே அந்த சத்தியம்! பாவியான ஸ்திரீயின்ஜீவியத்தை மாற்றி அவளைப் பரிசுத்தவதியாக்காவிட்டால் அவளைத் தயவாய் ஏற்றுக்கொண்டது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? ஆயக்காரரையும் பாவிகளையும் பட்சமாய் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய பாவத்திலேயே விட்டுவிட்டால், ஏற்றுக்கொண்டது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? சகேயுவின் வீட்டில் பிரவேசித்து அவனோடு தங்கியிருந்தும், அநியாயத்திலும் பொருளாசையிலுமிருந்து அவனை விடுவிக்காவிட்டால், அவன் வீட்டுக்குள் பிரவேசித்தது கிருபையாகலாம், சத்தியம் எங்கே? சத்தியத்திற்குச் சாட்சியாக அவர் பிறந்தார். அவரே சத்தியமானார்! "சத்தியமே உங்களை விடுதலையாக்கும்!" என்றார்.*

> **"பாவங்களிலிருந்து நாம் விடுவிக்கப்படாவிட்டால், கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்பட்ட தேவ கிருபை நமக்கு வியர்த்தமாகும்! தேவ கிருபையை பாவத்துக்கு மூடலாகக்கொண்டவர்கள் 'இக்காலத்தைப்போல்' அக்காலத்திலும் இருந்தார்கள்!**

"கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே, பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று கேட்டார் பவுல் (ரோமர் 6:1,2). அன்புள்ள தகப்பன் பிள்ளையின் கட்டியை அறுப்பது வேதனையாயிருக்குமே என்று அதை மூடி வைப்பானானால், பிள்ளை சாகும். கட்டியை அறுப்பதே பிள்ளைக்கு ஜீவன்! ஜீவனை விரும்புவதே தகப்பனுடைய அன்பு! நமதாண்டவர் கிருபையாயிருப்பதினாலேயே

*நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க விரும்புகிறார்! அவருடைய சத்தியமாகிய பட்டயம் நமது பாவக்கட்டை அறுத்தால் மாத்திரமே நாம் பிழைப்போம்!*

*ஒரு சிறுவன் நஞ்சுத்தன்மையுள்ள ஒரு பழத்தைப் பிடுங்கித் தின்னுகிறான். அதில் கொஞ்சம் தித்திப்பு உண்டு. ஆனால் அது நாளடைவில் அவனைக் கொல்லும். அவன் தாய் இதை அறிந்து, மனம் பதறி அவனைத் தண்டித்தாள். "அம்மா என்னை மன்னியுங்கள், நான் இனித் தின்னமாட்டேன்" என்று பையன் அழுதான். மறுபடியும் ஆசைப்பட்டு பிடுங்கித் தின்றான். இந்தச் சமயம், தாய் அதிகமாய் மனங்கலங்கி இனி ஒருபோதும் அதைத் தின்னாதே என்று சொல்லி, பலமாய் அடித்தாள். அம்மா இனி தின்னமாட்டேன் என்னை மன்னியுங்கள் என்று கெஞ்சினான்!*

> "
> **நான் உனக்கு மன்னித்து என்ன பிரயோஜனம்? மன்னித்தால் என்ன, மன்னிக்காவிட்டால் என்ன? நீ அதைத் தின்றால் 'சாவாயே' என்று அழுதாள்!**

*இது கதையல்ல, அடிக்கடி வீடுகளில் நடக்கிற காரியம். நாம் மன்னிப்பையே பிரதானமாகத் தேடி, தண்டனைக்குத் தப்பிக்கொள்ளப் பார்க்கிறோம்! கிருபையுள்ள இரட்சகரோ, நமக்கு நித்திய மரணத்தை வருவிக்கும் பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க வேண்டுமே! என்று தவிக்கிறார். பாவியான ஸ்திரீ பரிசுத்தவதியாக மாற்றப்படுவதே இரட்சிப்பு! பொருளாசைக்காரன் சகேயு மாற்றப்பட்டு கிறிஸ்துவை பொக்கிஷமாக ஏற்றுக்கொள்வதே இரட்சிப்பு! அவரது கிருபையும் சத்தியமும் நமக்குக் கொண்டுவருகிற மேலான ஆசீர்வாதம் இதுவே!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'கிறிஸ்தவ சமாதானம்' விலையேறப் பெற்றது!

*'புயலின் நடுவில்' சமாதானமே தெய்வீகம்*

*ஆண்டராகிய இயேசு கிறிஸ்து, தான் உயிர்த்தெழுந்த பின்பு, தன் 11 சீஷர்களை சந்தித்தபோதும்! மகதலேனா மரியாளை சந்தித்தபோதும்! எம்மாவூர் சீஷர்களை சந்தித்தபோதும்! தோமாவை சந்தித்தபோதும்! 'ஓர் விலையேறப்பெற்ற வார்த்தையே திரும்ப திரும்ப' கூறினார். அதுமாத்திரமல்ல தன்னுடைய நான்கு சுவிசேஷத்திலும் அந்த 'விலையேறப் பெற்ற வார்த்தையை' திரும்பத் திரும்ப கூறினார்.* **"உங்களுக்கு சமாதானம் உண்டாகக்கடவது!"** *என்பதே அந்த அற்புத வார்த்தையாகும். அவர்களோடு வாழ்ந்த சமயம் சமாதான*

*பிரபுவாக இருந்தார்! உயிர்த்தெழுந்த பிறகோ 'சமாதான ராஜாவாக' மாறிவிட்டார்!*

*"சமாதானத்தின் ராஜா" என கூறப்படுவது, நாம் எபிரெயரில் வாசிக்கிறதுபோல்"அழியாத ஜீவனுக்கும் வல்லமைக்கும்" சொந்தமான ராஜாவாக மாறிவிட்டார்! சமாதான ராஜாவை ஆதாரமாய் கொண்டுதான்"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்" என பவுல் பிலிப்பியர் நிருபத்தில் கூறினார் (பிலி.4:6-8). நான் சிறு பையனாய் இருக்கும்போது "நாளைய தினத்தைக்குறித்து கவலைப்படக் கூடாது" என்ற வசனத்தை என் தாயார் சொல்லிக்கொடுத்தார்கள். அந்த அறியாத நாட்களில், நான் என் அம்மாவிடம் "அப்படியானால், நாளைக்குரிய தோசைக்கு இன்றைக்கே மாவாட்டி வைக்கிறீர்களே?" என்று நான் அறியாத வெகுளியாய் கேட்டேன்.*

**"அப்போது என் அம்மா, மிகுந்த பொறுமையோடு "நாளைக்காக கவலைப்படுவது வேறு, நாளைக்காக ஆயத்தப்படுவது வேறு" என விளக்கி கூறினார்கள். ஆகவே ஓர் ஆயத்தமுள்ள கரிசனையை, கவலையோடு சேர்த்துக்கொள்ளக் கூடாது!**

*உங்களுக்கு தெரிந்த யாரோ சிலர், சிறைச்சாலையில் அடைபட்டு இருந்தால், நாம் அவர்களைப் பார்க்க சென்ற வேளையில் "கவலைப்படாதிருங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்" என கூறிவிடுகிறோம். ஆம், ஜெயிலில் அடைப்பட்டவர்களைப் பார்த்தே அப்படி கூறுவார்கள்! ஆனால்* **இங்கோ, பவுல் ஜெயிலில் இருந்தார்.** *அவ்வாறு இருந்துகொண்டு, வெளியில் உள்ளவர்களைப் பார்த்து 'கவலைப்படாதிருங்கள்!' என்றே கூறினார். 'இதைத்தான்' ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு தரக்கூடிய சமாதானம்* **உலகம் தரமுடியாத சமாதானம்** *என்றும்! புத்திக்கு எட்டாத சமாதானம் என்றும்! வேதம் குறிப்பிடுகிறது.*

*அதன்பிறகு "எல்லாவற்றையும் ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" என்று வாசிக்கிறோம். அப்படியானால் நீங்கள் தேவனுக்கு தெரியப்படுத்தி கேட்டுக்கொண்டதெல்லாம் கிடைத்துவிடும் என்று அர்த்தமோ? அது அல்ல, அதற்கும் மேலாக 'தேவ சமாதானம் உங்கள் இருதயத்தையும், மனதையும் நிரப்பும்' என்பதுதான், நாம் பெற்ற விலையேறப்பெற்ற நற்செய்தி! தேவ சமாதானத்தை விட மேலானது என்னவென்றால் சமாதானத்தின் தேவனே நம்மோடிருப்பார் என்பதுதான்!*

*அது எப்படியெனில், புயலுக்குப் பின்னே அமைதி என்ற புரிதலைவிட "**புயலின் நடுவிலும் அமைதி**" என்ற மாபெரும் வித்தியாசமேயாகும்.*

"

**இவ்வளவு விலையேறப் பெற்ற 'சமாதானத்தின் தேவனை' நாம் கொண்டிருக்கிறபடியால், "ஒன்றுக்கும் கவலைப்படாத வாழ்வை" நாம் பெற்று அனுபவிக்கிறோம்!**

*எனவேதான், கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது என, வேதத்தில் அடிக்கடி வாழ்த்துதல் கூறப்பட்டுள்ளது. அதாவது, தேவ சமாதானம் நமக்கு கிருபை தருகிறது என்பது சத்தியமல்ல! தேவ கிருபையே நமக்கு 'தெய்வ சமாதானத்தை' அருள முடியும்! என்பதே சத்தியமாகும். அவ்வாறு உங்கள் வாழ்க்கையில் தேவ கிருபை பெருகி, அதனிமித்தம் தேவசமாதானம் பெருகுவதுதான், மெய்யான வெற்றி வாழ்க்கை!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'இயேசுவின் சீஷத்துவம்' அன்பற்ற பிரிவினைக்கு பலியாகக் கூடாது!

*'தெய்வீக சீஷத்துவத்தை' சீர்குலைத்திடும் மனுஷீக பிரமாணம்*

*இயேசுவின் நாட்களில் '**கொர்பான் என்னும் காணிக்கை**' தேவனுக்கு கொடுப்பதாக எண்ணி, கொடுத்துவிட்டால் (Gift to God) பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமை தீர்ந்தது என வேதபாரகர்கள் போதித்து வந்தனர்! (மாற்கு 7:11). உண்மை என்னவெனில், வேதத்தில் ஒரு இடத்தில்கூட தேவன் இவ்வாறு போதிக்கவில்லை! மேலும் அந்த காணிக்கை, தேவனுக்கே கொடுத்துவிட்டதாகப் போதித்து, அதன்பிறகு தங்கள் சொந்த தகப்பனுக்காவது அல்லது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்யவிடாமல் 'தங்கள் பொருளாசை லாபத்திற்காக' ஆலய ஜனங்களுக்கு இந்த வேதபாரகர்கள் உபதேசமாக போதித்தார்கள்! (மாற்கு 7:12). வெளித்தோற்றத்தில் 'தேவனுக்கு காணிக்கை' என்ற புனிதத்தைக் காட்டி, தேவனுடைய அன்பின் கட்டளையான 'தாய் தகப்பனை கனம் செய்வாயாக என்ற பண்பை' பறித்துவிட்டார்கள்!*

"

**இவ்வாறு "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக!" என்ற உயர்வான தேவ கட்டளையை கொஞ்சம் கொஞ்சமாய் அகற்றிவிட்டு, அந்தப் புனித அன்பின் ஸ்தானத்தில் 'மனுஷர் கட்டளையை' நுழைத்து வைத்துவிட்டார்கள்! 'தாய் தகப்பன்**

**மீதுகொண்ட அன்பை புறக்கணிக்கும் செயலை' கவனமாய் மறைத்து "தேவனுக்கு ஒப்புக்கொடுத்த காணிக்கை, அல்லது பிரதிஷ்டை ஜீவியம்" என்ற பக்தியான மாயத்தை வைத்துவிட்டார்கள்!**

மேலும், அவ்வாறு 'தேவ கட்டளையை' அவமாக்கிய மூப்பர்களின் செயலை "நலமென்று" மக்கள் நம்பும்படி செய்து விட்டார்கள்! (வச.**9**).

*இயேசுவைப் பின்பற்றும் ஒப்பற்ற சீஷத்துவ வாழ்க்கையில் தாய், தகப்பனோ அல்லது மகன், மகளோ அல்லது சகோதர சகோதரிகளோ குறுக்கே வந்தால், அதை மறுக்க வேண்டும் என இயேசு தன் சீஷர்களுக்கு கட்டளையாகக் கூறினார் (லூக்கா **14:26**; மத்.**10:37**). இயேசுவை அன்புகூர்ந்து, அவரது கற்பனைகளை கைக்கொள்வதை விட, மனுஷீக அன்பில் ஈர்க்கப்பட்டு இயேசுவின் அன்பை மறுதலிக்கும் அபாயத்தையே இவ்வசனங்களில் ஆண்டவர் எச்சரித்துப் போதித்தார்!*

இந்த '**புனிதமான சீஷத்துவத்தை**' தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்தி, பல குடும்பங்களின் அன்பிலும், சபையிலும்கூட வெறுப்பையும், பிரிவினையையும் கொண்டுவரும் ஆயுதமாக தவறாய் கையாளத் துவங்கிவிட்டார்கள்! அதற்கு தூண்டுகோலாய், அன்று போலவே இன்றுள்ள 'வேத போதகர்கள்' முன் நிற்கிறார்கள்! அவர்களுக்கு மிகுந்த பயபக்தியுடன் 'தேவனுடைய ஸ்தானத்தையே' கொடுத்து ஆராதிக்கும் கூட்டம் இன்று அதிகமாய் பெருகிவிட்டது! ஆம், தேவன் ஒருபோதும் "தெய்வ அன்பையும், மனதுருக்கத்தையும்" பலியாக்கிவிட்டு, அதற்கு மாற்றாக யாதொரு காணிக்கை என்ற பெயரிலோ, அல்லது தேவ அர்ப்பணம் போன்ற சீஷத்துவ பெயரிலோ நம்மிடம் ஒருபோதும் கேட்கவே மாட்டார்!

இவ்வாறு, தாங்கள் 'மனுஷீக பிரமாணங்களால்' ஆட்கொள்ளப் பட்டு, அதற்கு அடிமையாகிவிட்டோம் என்ற உணர்வை அன்றுள்ள ஜனங்கள் இழந்துபோனார்கள்! ஏனெனில், ஒன்றல்ல இரண்டல்ல, இதுபோன்று "வேத வசனத்தை அவமாக்கும் 'அனேக காரியங்களையும்' செய்கிறீர்கள்" என இயேசு மூன்று முறை கூறி அங்கலாய்த்தார்! (வச.**4,8,13**). இன்று நாம் வாழும் இக்காலத்தில் கூட, ஆங்காங்குள்ள பல கிறிஸ்தவ சபைகளில் 'மனுஷீக பிரமாணம்' 'மனுஷீக பாரம்பரியம்' கொண்ட போதகங்களும், போதகர்களும் பெருகி இருப்பது, துயரமேயாகும்!

இது எவ்வளவு பெரிய தீங்கு என்றும், வேதம் உயர்த்தும் ஒருவருக்கொருவர் அன்பையும், குடும்ப அன்பையும், சபை மக்கள்

*அன்பையும் சிதைக்கும் என்பதையும் அறிந்த இயேசு "ஜனங்கள் எல்லாரையும் தன்னிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் யாவரும் எனக்கு செவிகொடுத்து உணர்வடையுங்கள்" என அழைப்பு விடுத்தார்! (மாற்கு 7:14):* "**கேளுங்கள் என் ஜனமே, கொர்பான் அர்ப்பண காணிக்கை என்றும், கர்த்தரின் சீஷத்துவம் எனவும் கூறி, தகப்பனுக்கோ அல்லது தாய்க்கோ அல்லது குடும்பத்திலுள்ள மற்றும் சபையிலுள்ள சகோதர சகோதரிகளுக்கோ அன்பு செலுத்தவிடாமல் அல்லது உதவி செய்ய விடாமல்..... 'வேத வசனத்தை அவமாக்கி போதித்திடும்' மனுஷருடைய கட்டளையை அனுசரிக்கும் சிறையிருப்பிலிருந்து வெளியே வாருங்கள்!" என்றே நற்செய்தி அறிவித்தார் (மாற்கு 7:8,10-14**ab**).**

*ஒரு வீட்டில், தன் அன்புள்ள சொந்த வாலிப பேரனின் மரண அடக்கத்திற்கு பயணம் சென்ற அவனது அன்புள்ள வயது முதிர்ந்த தாத்தாவை, அங்கு வந்த போதகர்கள், அவர் 'வேறொரு ஆவிக்குரிய சபையை' சார்ந்தவர் என புறக்கணித்து, கடைசி வரிசையில் 'அந்த பேரனின் அன்புள்ள தாத்தாவை' அமரச் செய்து விட்டனர்! துக்க வீட்டிற்கு கூடிவந்த பொதுமக்களில் ஒருவராகவே, கடைசி வரை நடத்தப்பட்டார்! இறந்த வாலிபனின் பெற்றோர்கள், "நாங்கள் என்ன செய்ய முடியும்? குடும்ப அன்பை முன்வைத்தால் 'சீஷனாய் இருப்பதற்கு தகுதியற்ற முதுகெலும்பற்றவர்கள்' என, அடக்க ஆராதனை செய்யாமல், சபை மக்கள் அனைவரும் போதகரோடு வெளியே சென்றுவிடுவார்களே" என அங்கலாய்த்தார்கள்! கேளுங்கள், இதுபோன்ற 'அன்பிற்கு துவம்சம்' ஏற்படும் சிறைவாச கட்டுகள் ஒழிந்திட வேண்டாமா?*

*இந்த பூமியில் வாழும் கிறிஸ்தவ வாழ்க்கையில் 'யாரோ ஒருவரிடம்' நம் தெய்வ அன்பை இழப்பதுகூட, அன்பின் பரிமள தைலத்தில் விழுந்து நாறச் செய்திடும் 'செத்த ஈக்கள்' என்பதை அறிந்து, தெய்வ அன்பை மறுதலிக்கும் மனுஷீக போதகத்தை விட்டும், போதகர்களை விட்டும் விலகி நின்று வாழ்வோமாக!*

*இதுபோன்ற 'விழிப்புடன் இல்லாத' யாராயிருந்தாலும், குருடருக்கு வழிகாட்டும் குருடர்களின் 'அன்பில்லாத ஒரே படுகுழிக்குள்' வீழ்ந்திடுவோம் என்ற எச்சரிக்கையை பெற்று, தேவனால் மனக்கண்கள் திறக்கப்பட்டு வாழ்ந்திட, தேவன் அருள்புரிவாராக! இவ்வாறு தேவனுக்குரிய உத்தமத்தோடு நாம் வாழ்ந்துவிட்டால், நம்மை பின்பற்றும் சந்ததியையும், இந்த படுகுழிக்குள் விழாதபடி பாதுகாத்திட முடியும்! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*

## எளிய ஜீவியத்தில்
## தேவ சமூகத்தைப் பழகி வாழ்ந்த
# சகோதரன் லாரன்ஸ்!



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'நிக்கொலஸ் ஹெர்மன்' (Nicholas Herman) என்ற பெயருடைய ஓர் எளிமையான பரிசுத்தவானை, சுமார் 300 வருடங்களுக்கு மேலாய் அவருடைய ஜீவியத்தை திரளான கிறிஸ்தவர்களுக்கு ஓர் சவாலாய் இன்றுவரை தேவன் வைத்துள்ளார். எளிமையான இந்த பரிசுத்தவான் பிற்காலங்களில் மிகுந்த அன்புடன் "சகோதரன் லாரன்ஸ்" என எல்லோராலும் அழைக்கப்பட்டார்! ஓர் தரித்திரமான வீட்டில் பிறந்தவர்தான் இந்த நிக்கொலஸ். பொதுவான கல்வி அறிவுகூட பெற முடியாமல், தன் ஏழையான குடும்பத்தினிமித்தம் பிரான்ஸ் ராணுவத்தில் போர் வீரனாய் சென்றார். பல்வேறு யுத்த காலத்தில் சிக்கிய அவர், அதிகமான காயத்தினிமித்தம் கால் ஊனமானார். தன்னுடைய 40-வது வயதில் பாரீஸ் நாட்டிலுள்ள 'கர்மேலைட்' என்ற கன்னிமாடத்தின் சமயலறை பணியாளராய் மாறினார். இவ்வாறு, சமயலறை பாத்திர பண்டங்களோடு துவங்கிய புது ஜீவியம் ஓர் நீடித்த அடுத்த 40- வருடங்களாய் தொடர்ந்தது.

அவர் தன்னைச் சுற்றிலுமுள்ள மக்களோடு சம்பாஷித்த உரையாடல்களும், அவர் எழுதி வைத்த சின்ன சின்ன பிரசுரங்களும் திரளான ஜனங்களுக்கு ஆவிக்குரிய ஜீவியத்தின் முன் மாதிரியாய் மாறியது! அவருடைய மரணத்திற்குப் பிறகு அவைகள் யாவும் தொகுக்கப்பட்டு "தேவனுடைய சமூகத்தை பழகிப் பாருங்கள்" என்ற புத்தகமாய் வெளி வந்தது. தேவனை தங்களுடைய தனிப்பட்ட வாழ்வில் வாஞ்சித்து நாடும் கிறிஸ்தவர்களுக்கும் "தேவனோடு கொண்ட ஐக்கியத்தை தனிப்பட்ட பழக்கமாய்" மாற்றிக்கொள்ள விரும்பும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும், அந்த புத்தகம் தொடர்ச்சியாய் கரம் கொடுத்து உதவி வருகிறது. கல்வி அறிவு இல்லாத ஒருவரிடம் 'ஆழமான ஆவிக்குரிய சத்தியங்கள்' புதைந்து கிடப்பதைக் காண்பது, நமது உள்ளத்தை மகிழச் செய்வது மாத்திரமல்லாமல், அவருடைய ஜீவியம் நாம் பின்பற்ற உகந்த சவாலாய் இருக்கிறது!

"நீங்கள் தேவனை நெருங்கிச் சேர வேண்டுமென்றால் 'உங்களின் ஒவ்வொன் றையும்' ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு முன்பாக அர்ப்பணித்து வாழ வேண்டும்! என்ற பங்கையே நான் எந்நாளும் வைத்திருந்தேன்" என அவர் கூறினார். தேவ உறவில் எந்தவித செயற்கையான தன்மையும் இல்லை. உதாரணமாய் "என்னுடைய சமயலறையிலிருந்துதான்" தேவனுடைய இனிய உறவை பெற்றேன்! தேவன் உங்களுக்குத் தந்தருளிய அன்றாட ஜீவியத்திலும், அன்றாட வேலைகளிலும் நீங்கள் நிறைவான சுத்திகரிப்பை பெற்றுவிட முடியும். காலங்கள் செல்லச்செல்ல, அவை அனைத்தும் "தெய்வ அன்பாய்" உங்கள் முழு ஜீவியத்தையும் மலரச் செய்துவிடும்! என்றே, தன்னைச் சுற்றி வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் மாதிரியாய் வாழ்ந்து பிரகாசித்தார்!

- நிரூபித்து வாழும் கிறிஸ்துவின் தாசர்கள்

## இம்மை வாழ்வில் மகிழ்ந்த 'தவளையின் முடிவு' நமக்கு வேண்டாம்!

அந்த நாளின் நண்பகல் வெயிலில் கற்களின் நடுவிலுள்ள குழியில், ஒரு தவளை ஆனந்தமாக அமர்ந்திருந்தது! அந்த இடம் அதற்கு "ஏர் - கண்டிஷன்" அறையில் இருப்பது போன்ற குளுமையை கொடுத்திருக்கும். அந்த ஆனந்தமான வாழ்வை அந்த தவளை நீண்ட காலமாக அனுபவித்து "மணி அடித்தால் சாப்பாடு. மாதம் பிறந்தால் சம்பளம்" என்ற பழமொழிப்படி அதின் நாட்கள் கடந்து சென்றன. இருளானதும் வீட்டின் அருகில் வந்து மின் விளக்குக்கு கீழாக அமர்ந்து கஷ்டமின்றி தனது ஆகாரத்தை பிடித்து உட்கொண்டுவிட்டு தனது உறைவிடத்துக்கு சென்றுவிடும்!

ஆனால், அந்த ஆனந்தமான வாழ்வுக்கு முடிவுகாலம் நெருங்கியது. எதிர்பாராத நேரம், பகலின் வெயிலில், தான் இருக்கும் ஆனந்தமான இடத்தில் பாம்பு ஒன்று திடீரென தனக்கு நேராக வருவதைக் கண்டு தவளை அதிர்ச்சியடைந்தது! முன்னால் ஓடி தப்ப இயலாது. பக்கவாட்டிலும் ஓடித் தப்பிக்க இயலாதவாறு இரு பக்கங்களிலும் கற்கள் இருந்தன. மிகவும் நிர்ப்பந்தமான நிலை. நல்ல வெயில் காயும் நேரத்தில் பொந்திற்குள் இருக்கும் தவளையின் மோப்ப வாசனை கிடைத்து அந்த பெரிய பாம்பு உள்ளே நுழைந்தது. 'பாம்பின் வாயிற்குள்' நிச்சயமாய் சிக்கிவிடுவோம், என்ற அச்சத்தில் மிரண்டு நின்றது தவளை!

மேற்கண்ட தவளையாரைப்போன்று திடீரென தங்களுக்கு எதிராக வரும் மரணத்தைக் குறித்து சற்றும் சிந்தை கொள்ளாமல், தங்கள் மட்டாக ஆனந்தமாக உலக உல்லாசபுரியில் மயங்கி திளைத்து வாழும் மாந்தர் பலகோடி பேர் உண்டு. சுகபோகமான "ஏர் கண்டிஷன் வாழ்க்கை", எந்த ஒரு கவலையும் கிடையாது! அவர்களுடைய திரண்ட செல்வம் வங்கிகளிலே கிடக்கின்றது. தங்களுக்கு ஒரு ஆத்துமா இருக்கின்றது. மரணத்திற்கு பின்னர் அது மோட்சம் அல்லது நரக பாதாளத்திற்குச் செல்லும் என்ற எந்த எண்ணமோ, கவலையோ அவர்களுக்கு கிடையாது. ஜெபம், வேத வாசிப்பு, தேவனைத் தேடுவது, மனந்திரும்புவது, பரிசுத்தமாக வாழ்வது எல்லாம் அவர்களுக்குச் சொன்னாலும் புரியாத பரிகாச வார்த்தைகளாகும்!

ஒருநாள் வரும். அந்த நாளில் மரணம் என்ற பாம்பு ஒன்று கணவனுக்கு நேராக திடீரென வரலாம் அல்லது மனைவிக்கு நேராக வரக்கூடும். தேவனற்ற தனிமையின் துயரத்தையும், வேதனையையும் குறித்து விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை! இணைந்து வாழ்ந்த ஆரவாரமான கூட்டு வாழ்வு நொடிப் பொழுதில் உடைந்து நொறுங்கி மண்மேடாகிட முடியும்!

அன்பான சகோதரா, தேவனைத் தேடாமல், மனந்திரும்பாமல், தேவனுக்கு பயந்து பரிசுத்தமாக வாழாத உங்கள் நிலைகுறித்து, இன்றே மனந்திரும்புங்கள்! இரட்சிக்கப்படுங்கள்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப **QR** பயன்படுத்தவும்

**maduraichristianfellowship@indianbk**

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**